புதுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ரூ.103 கோடி ஒதுக்கியதற்கு நன்றி!

# ஆதனக்கோட்டையில் முந்திரி தொழிற்சாலை அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் புதுக்கோட்டை டாக்டர் வை. முத்து ராஜா பேச்சு!

**சென்னை, மே. 1 - சட்டப்பேரவையில், தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், புதுக் கோட்டை தொகுதி உறுப்பினர் டாக்டர் வை.முத்து ராஜா பேசுகையில், ஆதனக்கோட்டையில் முந்திரி தொழிற்சாலை அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் புதுக்கோட்டை டாக்டர் வை. முத்துராஜா பேசியதாவது:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழர்களின் உரிமைகளுக்காக ஓய்வில்லாமல் உழைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்டை மாநிலங்களும் அண்ணாந்து வியக்கும் எங்கள் அரசியல் 'புறநானூறு'; அந்நியக் கொள்கைகளின் அதிரடித் திணிப்புக்கு என்றும் 'வளையாபதி'; மொழிப்போர்க்களத்தில் கூர்வாள் ஏந்திய எம் 'கலிங்கத்துப் பரணி'; தங்கத் தமிழகத்தின் மங்காப் புகழைச் சரித்திரமாக்கிய 'சங்க இலக்கியம்'; நான்காண்டுக்கு முன்பு தாய் மண்ணாம் தமிழ் நிலத்தில் தொழில் தொடங்க வாய்ப்பின்றி, அண்டை மாநிலத்துக்கு அவசர அவசரமாய் சென்ற நிறுவனங்களையெல்லாம் இன்று, நாடு போற்றும் தமிழ்நாட்டில் நம்பிக் காலடி எடுத்து வைத்தால், அவர் நலிந்திட வாய்ப்பே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த திராவிட மாடல் அரசை நம்பினோர் ஒருபோதும் கைவிடப்படார் என்ற வரலாற்றை உருவாக்கி இருக்கின்ற மாநில சுயாட்சி நாயகர் முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

பாசிசத்தின் வேரினை பந்தாடிய பகுத்தறிவு பகலவனின் பிரதிபலிப்பு, காஞ்சித் தலைவன் கண்டெடுத்த இயக்கத்தின் கொள்கை முழக்கம், நூற்றாண்டு நாயகராம் முத்தமிழறிஞரின் பண்பும், அன்பும் கொண்ட இளையோரின் நம்பிக்கை, எங்கள் தலைவரின் உறுதி மிக்க உழைப்புக்கு வலு சேர்த்து, துணை நிற்கும் தமிழகத்தின் எதிர்காலம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எந்தன் பணிவான வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை தலைவர் அவர்களுக்கும், பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், எனது மாவட்ட அமைச்சர்களான சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திறன்மிக்க வகையில் தொழில் துறையை சிறப்பாக முன்னெடுத்து சென்றுகொண்டிருக்கும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், தோழமை கட்சி உறுப்பினர்களுக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை கழக வேட்பாளராக அறிவித்தபோது எனது வெற்றிக்காக உழைத்த கழக நிர்வாகிகள், தோழமை கட்சி நண்பர்கள் மற்றும் என்மீது நம்பிக்கை வைத்து, எனக்கு வாக்களித்து இந்த பெருமைமிகு பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த உயிரினும் மேலான புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உங்களுக்கு என்றென்றும் உண்மை உள்ளவனாக இருப்பேன் என்று உறுதியளித்து எனது உரையைத் துவங்குகிறேன்.

**புதுக்கோட்டைக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த்திட்டம்!**

தலைவர் கலைஞர் அவர்கள் புதுக்கோட்டை மக்களுக்காக வழங்கிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டமே கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கிட்டு, குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்திட கடந்த ஆட்சியாளர்கள் தவறியதால், கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு புதுக்கோட்டையில் நிலவியது. இதனைச் சீரமைக்க கழக அரசு பல்வேறு நடவடிக்கையை மேற்கொண்டாலும், நிரந்தர தீர்வு காணும் வகையில் அடுத்த 25 ஆண்டுக் காலத்திற்கு புதுக்கோட்டை மக்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 1,820 கோடி ரூபாய் நிதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் புதுக்கோட்டை மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டு, புதுக்கோட்டை நகர் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு 103 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் 21, 1963 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரின்போது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து தொழில் துறை மானியக் கோரிக்கையில் உரையாற்றினார்.

அப்போது அவர் பின்தங்கி கிடக்கும் தமிழகத்தை முன்னேற்றுவதற்காக மேலும் பல தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் கொண்டுவர வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக அன்றைய ஆளும் கட்சியிடம் கோரிக்கை வைத்தார். ஏனென்றால், தொழிற்சாலைகள் தொடங்கப்படும் இடத்தில்தான், வேலை வாய்ப்புகள் உருவாகும்; தொழிற்சாலைகளை சுற்றி வணிக நிறுவனங்கள் உருவாகும். வணிகம் அதிகமானால்தான் அந்த மாநிலத்தின் வருவாய் அதிகரிக்கும். அந்த வருவாயை வைத்துத்தான் மாநில மக்களின் வளர்ச்சிக்காகவும், திட்டங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். இதை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணத்தில் தோன்றியதுதான், 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட SIDCO எனும் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். தமிழ்நாடு இன்று தொழில் துறையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக செயல்படுகிறது என்றால், அதற்கு அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முன்னெடுத்த இந்த SIDCOவே முதன்மை காரணம் என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது.



அரசியல் வரலாற்றில் 21 ஆம் நூற்றாண்டின் இந்த இனிய வேளையில் இந்திய பொருளாதாரத்தில் தமிழ்நாட்டை முன்னணியில் தூக்கி நிறுத்தி தனக்கென தனி முத்திரை பதித்துக் கொண்டிருக்கிறார் திராவிட மாடல் நாயகர், முதலமைச்சர் அவர்கள். தொழில் துறை வளர்ச்சிக்காக, தொழிலாளர் நலனுக்காக அவர் தொட்ட உயரங்களும், இட்ட கையொப்பங்களும் பொருளாதாரச் சரித்திரத்தில் சாசனமாய், கல்வெட்டாய் பொறிக்கப்படும் என்றால் அது மிகையல்ல!

அகில உலகத் தொழில் முனைவோர்களையும், முதலீட்டாளர்களையும் தமிழ்நாட்டிற்கு வரச்செய்து, தானும் அயல்நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு இந்தியப் பெரு நிறுவனங்களும், உலகப் பெரு நிறு வனங்களும் முதலீடு செய்ய இந்தியாவிலேயே, ஏன், தெற்கு ஆசியாவிலேயே "தமிழ்நாடுதான் முதல் முகவரி" என்ற நிலையை உருவாக்கி இருப்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் மக்களின் எதிர்பார்ப்புகளையும் மீறி ரூ.6.64 இலட்சம் கோடி முதலீடு அதாவது, 26 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது. குறிப்பாக, Apple நிறுவனத்தின் mobile phone உற்பத்தியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. Apple நிறுவனத்தின் முக்கிய ஒப்பந்ததாரர்களான FOXCONN மற்றும் TATA ELECTRONICS ஆகிய இரு நிறுவனங்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கு சுமார் ரூ.11,000 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 42,000க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் Apple முதல் HYUNDAI வரை, TATA முதல் VINFAST வரை நம் முதல்வர் அவர்களின் சீரிய முயற்சிகளால், உலகின் மாபெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி இந்த ஆண்டு வருகை புரிந்துள்ளனர்.

இத்தகைய தொழில் வளர்ச்சியை எட்டி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி தந்ததற்காகவும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதோடு, இத்தகைய தன்னிகரில்லா தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் புதுக்கோட்டை மாவட்டம் சற்று பின்தங்கியே உள்ளது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது எனது கடமையாகும். புதுக்கோட்டை சிப்காட் பகுதி 1970களில் துவங்கப்பட்டாலும், பெரியளவு தொழில் வளர்ச்சியை இன்றளவும் எட்டப்படவில்லை, எங்கள் பகுதி இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக பெரு நகரங்களையும், வெளிநாட்டையும் நாட வேண்டிய நிலைதான் இன்றளவும் நிலவுகிறது. எனது தொகுதியில் நிலவும் தொழில் துறை சார்ந்த சில முக்கிய பிரச்சினைகளை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

புதுக்கோட்டை சிப்காட் பகுதியில் தற்போது உள்ள இடங்களில் அதிக வேலை வாய்ப்புகளை தரக்கூடிய பெரிய நிறுவனங்கள் அமைப்பதற்கான இட வசதிகள் இல்லாத சூழலில், TIDEL Neo போன்ற IT நிறுவனங்கள் உருவாக்கி கொடுத்து, படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை சிப்காட் பகுதியில் பெரும்பாலும் FABRICATION தொழில் சார்ந்த நிறுவனங்களே செயல்பட்டு வந்தன. மேலும், அவை முற்றிலும் திருச்சி BHEL நிறுவனத்தை மட்டுமே நம்பி தொழில் செய்து வந்தவர்கள். ஆனால், சமீப காலமாக திருச்சி BHEL நிறுவனத்தில் சரிவர பணிகள் நடைபெறாததால், ஏறத்தாழ 40 சதவீதத்திற்கும் மேலான நிறுவனங்கள் புதுக்கோட்டை சிப்காட் பகுதியில் செயல்படாமலேயே உள்ளது. எனவே தகுந்த முன்னெடுப்புகளை மேற்கொண்டு மீண்டும் திருச்சி BHEL நிறுவனத்தை புதுப்பொலிவுடன் செயல்பட வைப்பதோடு புதுக்கோட்டை சிப்காட் பகுதிக்கும் தொழில் வளத்தை பெருக்கி வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**முதல்வன் திட்டத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு**

இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக திகழும் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் நாள்தோறும் பல இளைஞர்கள் பயன்பெற்று வருவதை பார்த்து நாடே முதல் வரை போற்றுகிறது. UPSC தேர்வெழுதும் மாணவர்கள் முதல் பள்ளி மாணவர்கள் வரை இத்திட்டத்தில் பயனடைந்து சாதனை புரிந்து வருகின்றனர். இத்திட்டத்தின்மூலம் கல்லூரியிலேயே தொழில்மீது அதிக ஆர்வம் உள்ள இளைஞர்களைக் கண்டறிந்து கல்லூரி படிக்கும்பொழுது தொழில் தொடங்குவதற்கான பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட காவிரி குண்டாறு வைகை இணைப்பு திட்டத்தை விரைவாக முடித்து புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலன் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முந்திரி சாகுபடி செய்வதில் இரண்டாவது பெரிய மாவட்டமாக திகழ்கிறது. சுமார் 15,000 ஏக்கர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம், ஆதனக்கோட்டை பகுதியில் முந்திரி தொழிற்சாலை நிறுவுவதன்மூலம் அந்த பகுதி மக்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள்.

**புதுக்கோட்டையில் மரவள்ளிக்கிழங்கு!**

மருத்துவமனைகளில் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதில் கையுறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் அத்தகைய கையுறைகளில் இருக்கும் நெகிழியானது மக்காமல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை உருவாக்குகிறது. எனவே, நெகிழிகளை தவிர்த்து கையுறைகளை மரவள்ளிக் கிழங்கிலிருந்து உருவாக்கி சுற்றுச்சூழலை பேணிப் பாதுகாக்கலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 140 ஏக்கர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு ஆண்டிற்கு 2,000 டன் அளவிற்கு விளைச்சல் கிடைக்கிறது. எனவே மரவள்ளிக் கிழங்கை பயன்படுத்தி மக்கும் plasticஐ உருவாக்கும் Ecoplast நிறுவனம் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் மல்லிகை, முல்லை, சம்மங்கி, காட்டுமல்லி, பிச்சி, அரளி, கனகாம்பரம், கோழி கொண்டை, செண்டி, ரோஜா உள்ளிட்ட பூக்களின் விளைச்சல் அதிகம் காணப்படுகிறது, மாவட்டத்தில் இருந்து பிற பகுதிகளுக்கு பூக்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில் பூக்களின் விளைச்சல் அமோகமாக உள்ள காலங்களில் பூக்களுக்கான உரிய விலை கிடைப்பதில்லை. வாசனை திரவிய தொழிற்சாலை மற்றும் அழகு சாதன தொழிற்சாலை, perfume factory, cosmetic industry அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், விவசாயத்திற்கான tractorகள் அதிக அளவில் விற்பனையாகும் மாவட்டமாகும். கட்டுமான தேவைகளுக்காகவும், கன ரக வாகனங்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டுவருகிறது. கன ரக வாகனங்கள் பயன்படுத்துவதில், நாமக்கல், சேலம், கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு அடுத்த படியாக, புதுக்கோட்டை இருந்துவருகிறது. புதுக்கோட்டையில் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியை அதிகரித்து, மக்கள் பயன்பாட்டிற்கு ஏதுவாக உதவ புதுக்கோட்டை SIPCOT தொழில் வளாகத்தில் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் ஆலையை (Automobile Spare Parts Manufacturing company) நிறுவித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவையில் படித்ததாக ஏற்று அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு வரலாற்றில், கழகம் ஆட்சியில் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக திகழ்ந்தபோதும் சரி, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து வளர்ச்சிக்குத் துணை நிற்கும் இயக்கமாக திகழ்வதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். தொழில் வளர்ச்சி மட்டுமின்றி மனித வள மேம்பாட்டிலும் இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலத்தையும் ஒப்பிட முடியாத அளவிற்கு இந்திய சராசரியை விட பல மடங்கு முன்னேறி நிற்கிறது, தமிழ்நாடு. இதைப் பொறுக்காத டெல்லி, தமிழ்நாட்டை அனைத்து வகைகளிலும் வஞ்சிக்கிறது. ஆனால், அவர்கள் கனவு ஒருபோதும் நிறைவேறாது. ஆணவத்திற்கும், அதிகார வர்க்கத்திற்கும் சட்டரீதியாகவும், கொள்கைரீதியாகவும் சம்மட்டி அடி கொடுத்து இந்திய ஒன்றியத்திற்கு சமூக நீதி மற்றும் மாநில உரிமை பாடம் கற்பிக்கும் நிகழ்கால ஆசிரியராக திகழ்கிறார், நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

2021 சட்டமன்றத் தேர்தலின்போது அதிகார பலத்துடன் ஆட்சியாளர்கள் கழகத்தை எதிர்த்தபோதிலும் அஞ்சாத சிங்கமாக சீறி எழுந்து மக்களை சந்தித்து தமிழ்நாடு முழுவதும் சென்று வென்றார், சரித்திர நாயகன் திராவிட மாடல் முதல்வர் அவர்கள். வரவிருக்கும் 2026 தேர்தலில் கழக அரசின் சாதனைகளோடும், தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடும் ஆட்சியைப் பிடித்து 2030ல் One trillion பொருளாதாரம் கொண்ட ஒரே மாநிலம் என்ற நிலைக்கு தமிழ்நாட்டை உயர்த்தவிருக்கும் முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வாழ்த்தி, வணங்கி மகிழ்வதோடு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழி நின்று, தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்க, மாநில உரிமை மீட்க, போராடும், தமிழ்நாடு வெல்லும் என்ற முழக்கத் தோடு நன்றி கூறி விடைபெறுகிறேன்,

தொகுதி கோரிக்கைகள்!

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு சட்டக்கல்லூரி, அரசு கால்நடைக் கல்லூரி மற்றும் புதிய இருபாலர் படிக்கும் அரசு கலைக்கல்லூரி போன்றவற்றை அமைத்து தர வேண்டும். மேலும் மாமன்னர் கல்லூரியில் புதிய பாடப்பிரிவுகள் Political Science, Public Administration. Defense Study கூடுதலாக ஏற்படுத்தி தர வேண்டும்.

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி கலைக்கல்லூரியில் புதிய பாடப்பிரிவாக Archaeology யை கூடுதலாக ஏற்படுத்தி தர வேண்டும். கலைஞரின் நூற்றாண்டை சிறப்பிக்கம் விதமாக கல்லூரி முன்பு தோரண நுழைவுயில் (Arch) அமைத்துத்தர வேண்டும்.

**கட்டியவயல் ரவுண்டானாவிற்கு புதிய மேம்பாலம்!**

புதுக்கோட்டை தொகுதி, கட்டியாவயல் ரவுண்டனாவிற்கு புதிய மேம்பாலம் கட்டித்தர வேண்டும்.

புதுக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வண்ணாரப்பேட்டை ஊராட்சி கல்லுக்காரண்பட்டி சாலையிலிருந்து காசான் கூத்து வரையிலும் புதிய தார்சாலை அமைத்து தர வேண்டும். பெருங்களூர் ஊராட்சி பிடாரி அம்மன் கோவில்தேர்வீதி சாலையை தார் சாலையாக மாற்றி அமைக்க வேண்டும். மங்கலத்துப்பட்டி ஊராட்சி அரியூர் முதல் பொக்கிஷகாரன் பட்டி வரை புதிய தார் சாலை அமைக்க வேண்டும்.

கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட வளங்கொண்டான்விடுதி ஊராட்சி ரைஸ்மில் முதல் மீனம் பட்டி வழியாக தொடண்டைமான் ஊரணி செல்லும் சாலையை புதிய தார்ச்சாலையாக அமைக்க வேண்டும்.

வெள்ளாளவிடுதி ஊராட்சி, மாரியம்மன் கோவிலிலிருந்து வடக்கு சேரணை வழியாக துவார் இணைப்பு சாலை, மற்றும் திருமணஞ்சேரி முதல் இலைக்கடிவிடுதி போன்ற இடங்களில் புதிய தார்சாலைகளை அமைக்க வேண்டும்.

புதுக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வாகவாசல், தர்ஹா, புத்தாம்பூர், செம்பாட்டூர், ராஜகுளத்தூர், அண்டக்குளம், வீரக்குடி விளக்கு, பெரம்பூர், கருக்புடையான்பட்டி ஆதனக்கோட்டை, பெருங்களூர் போன்ற ஊராட்சி பகுதிகளை புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் இணைத்து மகளிர் விடியல் பயணத்திட்டத்தில் இரண்டு புதிய பேருந்துகள் வழங்க வேண்டும்.

**42 வார்டுகளில் தார்ச்சாலை அமைத்திடுக!**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாநகராட்சிக்குட்பட்ட 42 வாடார்டுகளில் தார்சாலைகளை புதிதாக மாற்றி அமைத்து தர வேண்டும். மேலும் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாநகராட்சியில் இயங்கி வந்த சத்தியமூர்த்தி தங்கும் விடுதியை இடித்துவிட்டு திருமண மண்டபம் மற்றும் வணிக வளாகங்கள் கட்டித் தர வேண்டும். மேலும மாநகராட்சியின் 16 முக்கிய வீதிகளின் பின்புறம் உள்ள துப்புறவு சந்துகளில் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைத்து தர வேண்டும்.

புதுக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஒன்றியத்திற்கு புதிய அங்கன்வாடி மைய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும்.

புதுக்கோட்டை ஒன்றியம், ஊராட்சிகளான மணவிடுதி, செம்பட்டிவிடுதி, பெருங்கொண்டான் விடுதி, முள்ளூர், ஆதனக் கோட்டை, கணபதிபுரம், கருப்புடையான்பட்டி, செம்பாட்டூர், வடவாளம், புத்தாம்பூர், பெருங்களூர், வாராப்பூர்பட்டி, மற்றும் கறம்பக்குடி ஒன்றியம் ஊராட்சிகளான கருப்பட்டிபட்டி, மழையூர், வளங்கொண்டான்விடுதி, பொன்னன்விடுதி, மாங்கோட்டை, கணக்கன் காடு, முள்ளங்குறிச்சி, கருவடதெரு, திருமணஞ்சேரி, வாணக்கன்காடு, பல்லவராயன்பத்தை, அதிரான்விடுதி, ஆகிய ஊராட்சிகளில் புதிய அங்கன்வாடி மைய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும்.

புதுக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளான திருமலைராஜ சமுத்திரம், உப்புப்பட்டி, மங்களத்துப்பட்டி, ஊராட்சி, பெருங்களூர் ஊராட்சி, மேட்டுப்பட்டி, மணவிடுதி ஊராட்சி, கம்மங்காடு, கீழப்பட்டி, மழையூர், வலங்கொண்டான்விடுதி, முள்ளங்குறிச்சி, கோட்டைக்காடு, பல்லவராயன்பத்தை ஆகிய ஊராட்சிகளுக்கு நியாயவிலைக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் வை. முத்துராஜா பதிலளித்துள்ளார்.

---

வேலூர் சட்டமன்றத் தொகுதி

# பெருமாள் கோயில் அருகே சுரங்கப்பாதை அமைத்திட வேண்டும்!

## சட்டப் பேரவையில் வேலூர் ப.கார்த்திகேயன் வலியுறுத்தல்!

சென்னை, மே 1-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-

**ப.கார்த்திகேயன்:** நம்முடைய முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். நம்முடைய வேலூர் சட்டமன்றத் தொகுதியில் Venkateswara School, Voorhes School அருகில் பெருமாள் கோயில் இருக்கிறது. அங்கு மிகவும் traffic ஆக இருக்கிறது. நிறைய மாணவச் செல்வங்கள் சாலையில் குறுக்காக செல்வதால், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அங்கு ஒரு சுரங்கப்பாதையைக் கட்டித் தர வேண்டுமென்று



கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு சாதனைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் செய்திருக்கிறார். ஆகவே, அந்த இடத்தில் ஒரு சுரங்கப்பாதை கட்டிக் கொடுத்தால், மாணவச் செல்வங்கள் சாலையில் குறுக்காக செல்லாமல், சுரங்கப்பாதையில் செல்வார்கள் என அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** ஒரு மூன்று தினங்களுக்கு முன்னால், திருப்பத்தூரில் நான் பொறுப்பு அமைச்சராக இருந்த காலத்தில் அரசு நிகழ்ச்சிக்காக சென்றிருந்தேன். அன்று இரவு நான் வேலூரிலே புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற சுற்றுலா மாளிகையில்தான் தங்கியிருந்தேன். காலையில் நடைப் பயணம் செல்லும் போது, சட்டமன்ற உறுப்பினர் என்னை நேரடியாக அழைத்துக்கொண்டு, அந்த வைஷ்ணவ கோவிலைக் காட்டினார்.

எதற்காக கோவிலுக்கு அழைத்துச் செல்கிறார் என எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைக் காட்டிவிட்டு, இங்கே இப்பொழுதெல்லாம் ஆன்மீகக் கடனைச் செலுத்துவதற்காக வைணவர்களெல்லாம் அதிகமாக வருகிறார்கள். இங்கே ஒரு சுரங்கப்பாதை அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

இங்கு traffic எல்லாம் அதிகமாக உள்ளது என கோரிக்கை வைத்தார்.

அதனால் சம்மந்தப்பட்ட எங்களுடைய நெடுஞ்சாலைத் துறையின் அதிகாரிகளிடத்தில் அங்கேயே கண்காணிப்பு பணியாளர்களிடத்தில் சொல்லிவிட்டு, இதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா, பாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு சாத்தியக்கூறுகள் ஏற்படுமேயானால், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, கட்டாயம் அதை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்வோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருக்கோயிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய கழக ஒன்றியங்களைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், ஒன்றிய கழக செயலாளர்கள் அய்யனார், ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் வாழ்த்துரையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற் கிள்ளி உட்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளை கழக இளைஞர் அணி நிர்வாகிகள் 300க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.